
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 124 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 09 செவ்வாய்க்கிழமை (22.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


குஜராத் வெற்றி பக்கம் 4

## பாப்பரசர் காலமானார்



(வத்திக்கான்)
கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தமது 88 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

காணொளி அறிக்கையொன்றின் ஊடாக வத்திக்கான் உத்தியோக பூர்வமாக இதனை அறிவித் துள்ளது.

சுகவீனம் காரணமாக அண்மை யில் வைத்தியசாலையில் அனு 15ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரி நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(நீர்கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குண்டுத் தாக்குதல் இடம்பெற்று ஆறுவருடங்கள்நிறைவடைந்தும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என்பதை வலியுறுத்தி நீர்கொழும்பு கட்டுவாபிட்டிய சந்தியில் நேற்று மாலை 3.30 மணியளவில் கவன யீர்ப்பு போராட் 15ஆம் பக்கம் பார்க்க



# வடக்கின் கல்வி கீழ்நிலையில்

## பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டு



(வவுனியா)
ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை நாடு முழுவதும் இருந்தாலும் வட மாகாணத்தின் கல்வி இன்று பாதிப்படைந்து கீழ்நிலையில் உள்ளது என பிரதமர் ஹரிணி அமரசூரிய சுட்டிக் காட்டியுள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

### இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால்
## கம்பளையில் நீதிபதி ஒருவர் கைது

(கம்பளை)
கம்பளை, கெலிஓயா பிரதேச நீதிபதியொருவர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விவாகரத்து வழக்கின் 15ஆம் பக்கம் பார்க்க

### 7 நாட்கள் காய்ச்சல்
## இளம் குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)
7 நாட்கள் காய்ச்சல் காரணமாக இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் தெல்லிப்பழையைச் சேர்ந்த கவிந்தன் சாமினி (வயது-23) என்ற இளம் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். 16ஆம் பக்கம் பார்க்க




## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார்?

### ஜனாதிபதியிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி யார் என்பது தொடர்பிலான தகவல்களை விசேட அறி விப்பின் மூலம் வெளிக் 16ஆம் பக்கம் பார்க்க

### விசாரணைக்கு முன்னிலையாகுக
## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பு



(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விசாரணைக்கு ஆஜராகுமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க 15ஆம் பக்கம் பார்க்க

### மன்னாரில்
## விபரீத முடிவெடுத்த மாணவி மரணம்

(மன்னார்)
மன்னாரில் விபரீத முடிவெடுத்த மாணவி ஒருவர் 15ஆம் பக்கம் பார்க்க

### குற்றப் புலனாய்வுத் திணைக்களம்
## முன்னாள் ஜனாதிபதி மைத்திரியிடம் 7 மணி நேரம் வாக்குமூலம்

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சுமார் 07 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.



அரசியல்வாதிகள் உட்பட பலருக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதி வழங்கி 16ஆம் பக்கம் பார்க்க

### உயிர்த்த ஞாயிறு தாக்குதலை
## அரசியல் இலாபமீட்ட அரசு பயன்படுத்தப்படுகின்றது

### நாமல் எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)
அரசியல் இலாப மீட்டுவதற்காக உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரசாங்கம் பயன்படுத்துகின்றது என பாராளு 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது [illegible] உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர அரசின் நாடகங்களை மக்கள் இனியும் நம்பமாட்டார்கள்

## அஜித் பி பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். ஆனால் ஆட்சியேற்று 6 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை சூத்திரதாரியை இந்த அரசாங்கத்தால் இனங்காண முடியாமல் போயுள்ளது. அரசாங்கத்தின் பொய் நாடகங்களுக்கு இனியும் மக்கள் ஏமாறப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (20) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்ற போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராகக் காணப்பட்டார். 2018 இல் ரஞ்சித் மத்தும பண்டார அந்த அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். மைத்திரிபால சிறிசேன, அவரது அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவின் பிரதானி உள்ளிட்டோரின் தவறால் இந்த சதித் திட்டத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது.

நாட்டில் பாரிய அழிவொன்று ஏற்பட்டது. அனைத்து இன மக்களும் இந்த அழிவால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியையே எதிர்பார்க்கின்றனர். வெளிநாட்டவர்கள் உட்பட நாட்டிலுள்ள மூவின மக்களும் இந்தச் சதியால் கொல்லப்பட்டுள்ளனர். இதன் பிரதான சூத்திரதாரி கைது செய்யப்பட வேண்டும்.

தாம் ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரி கைது செய்யப்படுவார் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ஆனால் ஆட்சியேற்று 6 மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை சூத்திரதாரியை இந்த அரசாங்கத்தால் இனங்காணமுடியாமல் போயுள்ளது. ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை நான் வெளிப்படுத்துவேன் என மார்ச் 21ஆம் திகதி ஜனாதிபதி கூறினார்.

ஆனால் இன்று இது தொடர்பில் முழுமையான தகவல்களை தன்னால் கூற முடியாது என்றும், விசாரணைகள் சற்றுத் தாமதமடையும் என்றும் கூறுகின்றார். ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கையளித்துள்ளமையை பெரிய விடயமாக அவர் கூறிக் கொண்டிருக்கின்றார். கடந்த 6 மாதங்களில் இவற்றை குற்றப்புலனாய்வு பிரிவிடம் கையளிக்கவில்லையா? 180 நாட்களாக இதனை மாத்திரமா செய்து கொண்டிருந்தனர்?

இந்த அறிக்கைகளை ஏற்கனவே பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து 3 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அதில் சில பக்கங்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் அவையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறிருக்கையில் அதனை மீண்டும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சமர்ப்பிப்பதன் ஊடாக ஜனாதிபதி என்ன கூற முற்படுகின்றார்? அரசாங்கத்தின் இதுபோன்ற நாடகங்களுக்கு இனியும் மக்கள் ஏமாறப் போவதில்லை என்றார்.(ம-7)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் குவிக்கப்பட்ட பொலிஸார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுழைவாயிலில் பொலிஸார் நேற்று குவிக்கப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம் முன்னெடுத்த "வேரிலிருந்து விழுது வரை" ஒன்றிணையும் பொன்விழா சங்கமத்தை முன்னிட்டு நடைபவனி நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பேரணி மற்றும் நடைபவனி மேற்கொள்வதற்குத் தடை விதித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக நுழைவாயிலில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து தேர்தல் சார்ந்த நடைபவனி அல்ல என பொலிஸாருக்கு ஏற்பாட்டாளர்கள் தெளிவுபடுத்திய நிலையில் வேட்பாளர்களாகப் போட்டியிடுபவர்கள் நடைபவனியில் பங்கேற்க முடியாது என்ற நிபந்தனையுடன் நடைபவனி இடம்பெற்றது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம் முன்பாக ஆரம்பித்த நடைபவனி பிரதான நுழைவாயில் ஊடாகச் சென்று பல்கலைக்கழக விஞ்ஞான பீட நுழைவாயிலூடாக மீண்டும் கலைப்பீடத்தை வந்தடைந்தது.

நடைபவனியில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகக் கலைப்பீடப் பழைய மாணவர் சங்க நிர்வாகிகள், பல்கலைக்கழக பழைய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(ம-7)


## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இலக்கம் - PA 52-18.03.1972

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**1. பதவி குறியீட்டு இல :- உற்பத்தி முகாமையாளர் 107/11**

சம்பள அளவுத்திட்டம் :- 19,280-190x10-210x10-23,280.00

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

(அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

(ஆ) கூட்டுறவு ஊழியர் உயர்தரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் மேற்பார்வை நிலைப்பதவி ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்./

க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/ பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் மேற்பார்வை நிலைப்பதவி ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி :- 30.04.2025**

**மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான பொதுவான நிபந்தனைகள்**

1. பதவிக்கேற்ப பிணைப்பணம் அறவிடப்படும்.
2. வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டது)
3. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்படும்.
4. கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
5. சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தேசிய அ.அ.இல, பிறந்த திகதி, தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்டு கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச்சான்றிதழ் பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
7. விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.
8. விண்ணப்பங்கள் தலைவர், பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, பளை. எனும் முகவரிக்கு எதிர்வரும் 30.04..2025ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
9. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

க.இராசதுரை,
தலைவர்,
பளை.ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

(C-2767) 21.04.2025








## கண்ணீர் அஞ்சலி




எமது பிரதேச செயலகத்தின் சிறுவர் பெண்கள் பிரிவில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் (WDO) கடமையாற்றும் **திருமதி.சுதர்சன் மீரா** அவர்களுடைய அன்புத் தந்தையார்

**அமரர் நடராசா இராசேந்திரா**

அவர்கள் 20.04.2025 அன்று இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... **பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-2763)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையானுக்காக கவலைப்படும் நாமல்
# காரணம் விரைவில் வெளியாகும்
## என்கிறார் அமைச்சர் நளிந்த



(கொழும்பு)

**முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்ற சிவனேசத்துரை சந்திரகாந்தன் தொடர்பில் பாராளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கவலையடைவதற்கு காரணம் உள்ளதாகவும், அதனை எதிர்காலத்தில் அனைவரும் அறிந்து கொள்ள முடியும் எனவும் அமைச் சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

எனவே, இந்த விடயம் தொடர்பில் விசாரணைக் குழு உரிய முறையில் விசாரணை களை நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் என்ற அடிப்படையில் அதற்கான வசதி களை மாத்திரம் தங்களது தரப்பு வழங்குவதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை தொட ர்ந்து சட்டமா அதிபரால் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும்.

இதனையடுத்து நீதிமன் றத்தின் ஊடாக சூத்திரதாரி களுக்குத் தண்டனை வழங்கப் படும். ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய சரியான சந் தேகநபர்கள் கைது செய்யப்படுவார்கள்.

அவ்வாறு இடம்பெறும் போது உதய கம்மன்பில, ரணில் விக்கிரமசிங்க, நாமல் ராஜபக்ஷ மற்றும் சரத் வீர சேகர போன்றோர் பதற்ற மடைவது தொடர்பில் எமக்கு எவ்வித ஆச்சரியமும் இல்லை என்று அமைச்சரவைப் பேச் சாளர் அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி-8)

# கறுவா ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுச் சந்தைகளை அடிப்ப டையாகக் கொண்டு பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா உற்பத்தி களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீனா, ஐரோப்பிய ஒன்றியம், மத்திய கிழக்கு உள்ளிட்ட பல நாடுகள் அதிகளவில் கறு வாவைக் கொள்வனவு செய்து வருவதாக ஏற்றுமதி அபிவிரு த்தித் திணைக்களம் தெரிவித் தது. பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா ஏற்றுமதியை அதிகரிப் பதன் ஊடாக நாட்டிற்கு அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள் ளது. (நி-8)

## வரி விதிப்பு விவகாரம்
# ட்ரம்ப்-அநுர சந்திப்பின் மூலம் தீர்வு காண முடியும்
## ஹர்ஷ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேரடியாகச் சென்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பைச் சந்தித்து பேச்சுவார்த்தை களை முன்னெடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் கலா நிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் ஊட கங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது சீனாவைத் தவிர ஏனைய நாடுகளுக்கு 90 நாட் கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதனை விடுத்து வரி நீக்கம் செய்யப்படவில்லை.

எமக்கு முன்னர் வேறு நாடு கள் சென்று அமெரிக்காவுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியைக் குறைத்துக் கொண்டால் எமக்கு நெருக்கடி ஏற்படும்.

எனவே எமக்கு நேரம் போதாது. விரைவில் இதற்கு பொறுத்தமான நடவடிக்கை களை அரசாங்கம் முன்னெ டுக்க வேண்டும்.

வரி விதிக்கப்பட முன்னரே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் இது குறித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றார்.

அதற்கமைய அமெரிக்கா வின் துணை ஜனாதிபதி இவ் வாரம் மோடியைச் சந்திப்ப தற்காக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இந்த 90 நாட்களுக்குள் ஏதேனும் செய்வதற்கு இந்தியா தீவி ரமாக முயற்சித்துக் கொண்டி ருக்கிறது.

இம்மாத இறுதியில் இடம் பெறவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி யின் பருவகாலக் கூட்டத்துக்கு செல்லும் போது அமெரிக்கா வின் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடத்தும் தரப்பினரை சந்திக் கவுள்ளதாகக் கூறுகின்றனர்.

அவ்வாறான பேச்சு வார்த் தைகள் ஊடாக எதையும் செய்ய முடியாது. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேரடியா கச் சென்று ட்ரம்பை சந்தித்து பேச் சுவார்த்தைகளை முன் னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)


# மணிவிழா வாழ்த்துக்கள்

## திருமதி. ஜெயலட்சுமி உதயகுமார்
(சிரேஸ்ட விரிவுரையாளர்)



### சேவை விபரம்

- யா/செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலை (1988-1992)
- யா/ஆழியவளை சீ.சீ.த.க வித்தியாலயம் - உப அதிபர் (1993-1995)
- கிளி/ இராமநாதன் மகா வித்தியாலயம் (1996-1997)
- வவு/ செட்டிக்குளம் மகா வித்தியாலயம் (1997-2002)
- யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை- வருகைதரு விரிவுரையாளர் (1999-2002)
- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி (2002-2025)

### கல்வித் தகைமைகள்

- கலைமாணி (B.A)
- பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE)
- பட்டப்பின் கல்வி முகாமைத்துவம் (PGDEM)
- முதுகலைமாணி (MA in Culture)
- முதுகல்விமாணி(M.ED)
- முதுதத்துவமாணி (M.phill)




### பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

கடந்த இருபத்து இரண்டு ஆண்டு காலமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச் சிக்கும் தரமான கல்விக்கும் அடித்தளமிட்டு ஆரம்பக்கல்வித்துறையில் சிறந்ததொரு விரிவுரையாள ராகப் பணியாற்றியதோடு மட்டுமன்றி ஆரம்பக்கல்வி மன்றக் காப்பாளராகவும் அனைவரிடத்தேயும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவதோடு மாணவ ஆசிரியர்களின் மனங்களில் இடம்பிடித்த விடுதிக் காப்பாளராகவும் செயற்பட்டு வந்தார். அதுமட்டுமன்றி இக் கல்லூரியின் அனர்த்த முகாமைத்துவ உதவி இணைப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார். இவர் பல்வேறுசமூக சேவைகளிலும் பணியாற்று வதோடு சிறந்ததொரு கவிஞர், எழுத்தாளராகவும் திகழ்கின்றார். இவர் கிட்டத்தட்ட பதினைந்திற்கு மேற்பட்ட விருதுகளை முகநூல் குழுமங்களினூடாக பெற்றுள்ளார். இவர் யாழ்.மாவட்ட மகளிர் பேரவை செயலாளராகவும் திகழ்கின்றார். இவ்வாறு பல்வேறு பரிமாணங்களில் திகழும் திருமதி. ஜெயலட்சுமி உதயகுமார் நல்லதொரு குருவாகவும் சிறந்த தாயாகவும் சக விரிவுரையாளர்களிற்கு நல்லதொரு சகோதரியாகவும் நிர்வாகத்திற்கு சிறந்ததொரு ஆலோசகராகவும் திகழ்ந்து இவர் இன்று எமது கல்லூரி வெள்ளிவிழாக் காணும் இவ் வருடத்தில் தனது தடத்தைப் பதித்துச் செல்கின்றார். இன்றைய இந்த மணிவிழா நாளில் திருமதி ஜெயலட்சுமி உதயகுமார் அவர்கள் சீருடனும் சிறப்புட னும் வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பீடாதிபதி –இரா.லோகேஸ்வரன் (யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

(C-2761)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சிரேஸ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி 20.04.2025 அன்று ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி. ஜெயலட்சுமி உதயகுமார் அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள் வதுடன் அவரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்லஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்– கல்லூரிச் சமூகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சுப்பரா’ சுப்மன் ‘ஜோரா’ குஜராத்

## ஈடனில் ஈஸியாக வீழ்ந்தது கொல்கத்தா



அணித் தலைவர் சுப்மன் கில், சாய் சுதர்சன் அரைச்சதம் கடந்து கைகொடுக்க குஜராத் அணி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வெற்றி கொண்டது.

பிரீமியர் லீக் தொடரின் 39ஆவது போட்டி நேற்று மேற்கு வங்கம் மாநிலம் கொல்கத்தாவில் ஈடன் கார்டனில் நடைபெற்றது.

இதில் குஜராத் அணியும், கொல்கத்தா அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி, களத் தடுப்பைத் தேர்வு செய்தது. இதனையடுத்து, துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் நிதானமாக ஆடத் தொடங்கினர்.

**சாய் சுதர்சன், சுப்மன் கில் அரைச்சதம்**

அணித் தலைவர் கில் சிறப்பாக விளையாடி 3 சிக்சர் மற்றும் 10 பவுண்டர்கள் அடித்து, 55 பந்துகளில் 90 ஓட்டங்களுக்கு அரோரா பந்தில் ஆட்டமிழந்தார்.

சுப்மன் கில்லைத் தொடர்ந்து சாய் சுதர்சன் 33 பந்துகளில் 50 ஓட்டங்கள் விளாசினார். இறுதியில் ரசல் பந்தில் 52 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த ராகுல் டிவட்டியா ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஹர்சித் ராணா பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த ஜோஸ் பட்லரும் ஷாருக்கானும் ஆட்டமிழக்காமல் முறையே 41, 11 ஓட்டங்கள் சேர்த்தனர்.

இறுதியில் 20 ஓவர் முடிவில், குஜராத் அணி, 3 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் கொல்கத்தா அணி அணியின் அரோரா, ஹர்சித் ராணா மற்றும் ரசல் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

199 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களம் இறங்கிய கொல்கத்தா அணியில் ரஹமானுல்லா ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். சுனில் நரைன் 17, ரகானே 50 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து வெங்கடேஷ் ஐயர் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன்போது கொல்கத்தா அணி 13 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 101 ஓட்டங்களை எடுத்திருந்தது. 42 பந்துகளில் 98 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ரிங்கு சிங்கும், ஆன்ட்ரி ரஸ்ஸலும் விளையாடினர்.

இதில் ஆன்ட்ரி ரஸ்சல் 21 ஓட்டங்களிலும், ராமன்தீப்சிங் ஒரு ஓட்டத்திலும், மெயின் அலி ஓட்டம் ஏதும் எடுக்காமலும் ஆட்டமிழந்ததால், கொல்கத்தா அணி 18 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 137 ஓட்டங்கள் எடுத்து தடுமாறியது. தொடர்ந்த ரகுவன்ஷி 8ஆவது விக்கெட்டை பறிகொடுத்தார்.

குஜராத் அணி சார்பில் கிருஷ்ணா, ரஷீத்கான் தலா இரு விக்கெட்டுகளை எடுத்தனர்.

இறுதியில் கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 159 ஓட்டங்களை எடுத்தது.

இதையடுத்து 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றி பெற்றது. (ம-7)




**உதயகுமார்**

கையில் இருக்கும் போதும், அதைக் காலி செய்யும் போதும் தெரிவதில்லை.



தேவைக்காக பிறரிடம் கைகட்டி, கை நீட்டி வாங்கும் போது தான் புரியும் பணத்தின் அருமை....

**ஈஸ்வரன்**

நோயாளி-நேற்று ஏன் டாக்டர் நீங்க ஆஸ்பத்திரிக்கு வரலை.
டாக்டர்: ஜீரம் அதான் வரலை.
நோயாளி: எனக்கும் தான் ஜீரம், நான் வரலியா?



**யதுராஜ்**

பாக்கெட்ல ஒரு ரூபா கூட இல்லாம திரியும் போது வாழ்க்கை கத்து தருமே ஒரு பாடம் அது மட்டும் சாகும் வரைக்கு மறக்காது சேர்...



**வீரலட்சுமி**

தொவச்சுப் போட்ட துணியெல்லாம், ஒரு அரை மணி நேரத்தில காய்ஞ்சிருது குளிச்சிட்டு போட்ட சட்டை, ஒரு 15 நிமிடத்தில நனைஞ்சிருது.. முடியல..




**சதாஜினி**

டேய் டாக்டர் செலவு மட்டும் மாசம் இரண்டாயிரம் ஆகுதடா...
அவரோட செலவை எல்லாம் நீங்க எதுக்கு அண்ணே செய்யிறீங்க



**சோபா**

அப்பெல்லாம் இது தான் எங்க ஏடி.எம் & பின்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பக்கத்தில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் எரிவாயு கசிந்ததில் குடும்பப் பெண் படுகாயம்

(தருமபுரம்)

கிளிநொச்சிப் பகுதியில் தீப்பற்றி எரிந்து பெண் ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகிமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மருதநகர் பகுதியில் நேற்று முன்தினம் 3.30 மணியளவில், 59 வயதுடைய பெண்ணொருவர் தனது வீட்டில் சமையல் செய்து கொண்டிருந்தபோது, எரிவாயு சிலிண்டர் கசிவு காரணமாக திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் அணிந்திருந்த ஆடையில் தீப்பற்றி பலத்த காயங்களுடன் அவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நடந்தபோது வீட்டில் அவர் மட்டும் இருந்துள்ளார் அத்துடன் இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8-316)

# உள்ளூராட்சி தேர்தல் 20 மனுக்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான சில உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட 20 மனுக்களை மேல்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாமல் நீதிமன்றம் அதனை நிராகரித்ததாக தெரிவிக்கப்படுகிறது. பல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களால் தங்கள் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து தொடர்புடைய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. (நி-8)

# வவுனியா விபுலானந்தா கல்லூரி மைதானப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## பிரதமர் உறுதி



(வவுனியா)

வவுனியா விபுலானந்தா கல்லூரிக்கு விரைவில் விளையாட்டு மைதானம் பெற்றுக் கொடுக்கப்படும் என பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் நேற்று முன்தினம் பிரதமருடன் வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது, வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும் அதற்கான ஒரு நிரந்தர மைதானம் இதுவரை இல்லை என்பது கவலைக்குரிய விடயம்.

மைதானத்திற்கான நிலம் ஒன்றினை கொள்வனவு செய்ய நீண்ட நாட்களாக பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும் இதுவரை அது கைகூடவில்லை. கடந்த காலங்களில் அரச அதிகாரிகள், பல அரசியல்வாதிகள் ஆகியோருடன் கலந்துரையாடி மைதானத்தை பெற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த போதும் இதுவரை அது கைகூடவில்லை.

தற்போதைய கல்வி அமைச்சர் மற்றும் பிரதமர் என்ற அடிப்படையில் இப் பாடசாலையின் மைதானப் பிரச்சனைக்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு பாடசாலை நிர்வாகத்தால் பிரதமரிடம் இதன்போது கோரப்பட்டது.

பாடசாலை தொடர்பில் கேட்டறிந்த பிரதமர் மைதானப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். மாணவர்களுக்கான மைதானம் விரைவில் பெற்றுத் தருவாக இதன்போது உறுதியளித்தார். இச் சந்திப்பில் பிரதமருடன் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன் மற்றும் செ.திலகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-250)

# பாரவூர்தியுடன் பேருந்து மோதி விபத்து-22 பேர் காயம்



(கொழும்பு)

நிட்டம்புவ - கிரிந்திவெல பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

இராணுவ வீரர்களை ஏற்றிச் சென்ற பேருந்து, எதிர் திசையிலிருந்து வந்த பாரவூர்தியுடன் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் வத்துபிட்டிவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், அதில் 20 பேர் சிகிச்சை நிறைவடைந்த பின்னர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி


அமரர்.

**வல்லிபுரநாதர் சரோஜினிதேவி**

திதி : 2025.04.22

பிறப்பு 16.08.1948

இறப்பு 03.05.2024



பூவினும் மெல்லிய இதயம்-எம்
தாயெனும் சீரிய உள்ளம்
வாழ்விலும் புன்னகை உதயம் என்றும்
நீங்காது உந்தன் எண்ணம்.

கரணவாய்,
கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(1053)

# இராசிபலன்

22.04.2025
சித்திரை 09, செவ்வாய்க்கிழமை
நவமி பிற்பகல் 1.36 மணிவரை

திருவோணம் முற்பகல் 8.26 மணிவரை
சுபநேரம் 10.31-12.01 மணிவரை
இராகுகாலம் 3.01-4.31 மணிவரை

உலக பூமி தினம்
சந்திராஷ்டமம்-
பூசம்

வளவன்

**மேஷம்** வீட்டைச் சிரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், தாய்வழி அனுகூலம் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களை பெருக்கி கொள்ள முற்படுவீர்கள்.

**கடகம்** எண்ணிய காரியங்களில் முன்னேற்றம் கானும் நாள், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**துலாம்** வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், நண்பர்கள் வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், தாய் வழி அனுகூலமுண்டு.

**மகரம்** திடீர் பயணங்கள் செய்யும் வாய்ப்புண்டு, வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**ரிஷபம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்புண்டு

**சிம்மம்** கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், நன்மைகள் நாடி வரும் நாள், மறை முகப்போட்டிகள் மாறும்.

**விருச்சிகம்** விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** குறைவாகப் பேசினாலும் குறை கூறிப் பேசாமல் இருப்பது நல்லது, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**கன்னி** எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியங்கள் வெற்றி பெறும்.

**தனுசு** வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

அளவறிந்து உண்பவன் ஆயுள் நீளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் விநியோகத் திட்டங்களை பார்வையிட்ட ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள்



(தருமபுரம்)
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நீர் விநியோகத் திட்டங்களை ஆசிய அபிவிருத்தி பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழுவினர் பளையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற குடிநீர் விநியோக நடவடிக்கைகளை பார்வையிட்டதோடு, பொது மக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (நி-8-316)

# சைவப்புலவர் பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற 2025 ஆம் ஆண்டிற்குரிய இளஞ் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 16,17,18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயம் மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு வரலாறு,17 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9 மணிக்கு சாத்திரம் பி.ப 2 மணிக்கு உரைநடை , 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு இலக்கியம் பி.ப 2 மணிக்கு இலக்கணம் ஆகிய பாடங்களுக்குரிய பரீட்சைகள் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் வைகாசி முதல் வாரத்தில் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவித்துள்ளார். (நி-8)

# வேம்படி மகளிர் பாடசாலைக்கு புதிய அதிபர்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபராக கிரேஸ் தேவதயாளினி தேவராஜா தனது கடமைகளை நேற்றைய தினம் திங்கட்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளராக இது வரை காலமும் கடமையாற்றி வந்தவர், தற்போது வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபராகக் கடமையேற்றுள்ளார். (நி-3-8-33)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)
அளவெட்டி நாகேஸ்வரம் திருவருள் மிகு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.53 முதல் 7.24 மணி வரையுள்ள இடப லக்கின சுப முகூர்த்தத்தில் இடம் பெறவுள்ளது.

மஹா கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தல் நிகழ்வு இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; நினைவேந்தல் நிகழ்வு





(யாழ்ப்பாணம்)
உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்றையதினம் யாழ்ப்பாணம் பெரிய கோவிலில் இடம் பெற்றது.

யாழ்ப்பாண மறை மாவட்ட பங்குத்தந்தை கலாநிதி ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் அவயவங்களை இழந்தவர்களுக்கான பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலி, பொதுச் சுடரேற்றல், மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு அஞ்சலிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அருட்பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-8)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(சாவகச்சேரி)
இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும்-புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவிருப்பதாகப் பாடசாலையின் முதல்வர் தி.அபராஜிதன் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி தினத்தில் பழையமாணவர்கள் கலந்து கொண்டு பொதுக் கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மேலும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-3-8-50)

## யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் சுவடிப் பிரசுர வெளியீடுகள் இன்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை "கே. கே.எஸ் வீதி அன்றும் இன்றும்: வண்ணார் பண்ணை அத்தியாயம்" எனும் ஒளிப்படக் காட்சியைப் பார்வைக்காக திறந்து வைப்பதுடன் "வேர்களை விற்றல்" எனும் அரும்பொருட்களைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பற்றிய ஓர் சுவடியாக்கத் தொகுப்பையும் வெளியிடவுள்ள நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் நுண்கலைத் துறையின் இறுதிவருட மாணவர்களின் "மரபுரிமை: மாறும்தளம்" எனும் காண்பியக் காட்சி நுண்கலைத் துறையின் கலைக் கூடத்தில் இடம்பெறவுள்ளதுடன் இதில் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் காண்பியப் படைப்பாளிகளின் தெரிவு செய்யப்பட்ட படைப்புகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இவ்விரு காட்சிகளும் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 26 ஆம் திகதி சனிக்கிழமை வரை காலை 10 மணி முதல் 4.30 மணி வரை பொது மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்குமென்பதுடன் இக் காட்சிகளைப் பாடசாலை மாணவர்கள், கலை ஆர்வலர்கள், பொது மக்கள் அனைவரும் பார்வையிட முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-3-8)

# வேரிலிருந்து விழுதுவரை பொற்கலைச் சங்கமம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம் முன்னெடுக்கும் "வேரிலிருந்து விழுதுவரை" பொற்கலைச் சங்கமம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை. 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மற்றும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய தினங்களில் இடம் பெறவுள்ளன.


முதல் நாள் நிகழ்வாக "பொற்கலை மலர் வெளியீடும் மதிப்பளிப்பும் நிகழ்வு 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளதுடன்,இரண்டாம் நாள் நிகழ்வாக "பொற்கலைப் பொழுது" நிகழ்வு 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் மூன்றாம் நாள் நிகழ்வாக "பொன் அகவை- உண்டாடல்" நிகழ்வு 28 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.25 மணிக்கு சேர். பொன் இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-3-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்

## பேராயர் வேண்டுகோள்



**(கொழும்பு)**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மேற்கொண்ட குழுவின் தலைவர் என கருதப் படும் சஹ்ரான் ஹாசிமிற்கும் இராணுவ புலனாய்வு பிரிவிற்கும் இடையிலான தொடர் புகள் குறித்து ஜனாதிபதி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஆறு வருடங்களாவதை குறிக்கும் விதத்தில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில் இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் விசாரணை தொடர்பில் ஜனாதிபதிக்கு ஏழு வேண்டுகோள்களை விடுத்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் தொடர்பான முழுமையான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும், பொதுமக்களிற்கு அதனை பகிரங்கப்படுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் வழக்குகளை கண்காணிப்பதற்கு சுயாதீன வழக்குரைஞர் அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைத்து சக்திகளையும் அடையாளம் காண வேண்டும், உண்மையை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு காரணமானவர்கள் அவர்கள் எந்த பதவியிலிருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதியிடப்பட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழுவின் அனைத்து பரிந்துரைகளையும் நடைமுறைப் படுத்த வேண்டும்.

சஹ்ரான் ஹாசிமிற்கும் இராணுவப் புலனாய்வு பிரிவிற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும், முக்கிய சாட்சியான ஆசாத் மௌலானா தெரிவித்த விடயங்கள் உட்பட சனல் 4 இன் ஆவணப்படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சதித் திட்டத்திற்கு காரணமான துணை இராணுவ குழு கட்டமைப்புகளை செயல் இழக்கச்செய்வதற்காக புதிய சட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

ஆட்சியில் உள்ளவர்கள் மக்களை ஆள்வதை விட மக்களிற்கு சேவை யாற்றுவதை உறுதி செய்யும் புதிய கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1991- இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L, Welding<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15344 | பிறப்பு-2000-இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bsc,Teacher<br>எதிர்பார்ப்பு: Doctor , Engineer, Teacher<br>தொ.இ: G/14590 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்-BSc, Research (Canada)<br>எதிர்பார்ப்பு:Engineer, IT Field, BSc graduates<br>தொ.இ: B/15346 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்-பூசம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Network Tele com Engineer(London)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14593 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 12 இல் செவ்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:Irrigation Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15347 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்-விசாகம்<br>கி.பா -67<br>தகைமை/தொழில்: BA (following)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/14596 |
| பிறப்பு: 1992- இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 12 இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: BSc, Business Analyst(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15348 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா- 06 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் -Network System Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ: G/14599 |
| பிறப்பு: 1994- இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>கி.பா-49 7 இல் செவ்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: HNDE, TO<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15349 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்பூரம்<br>கி.பா- 32 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் -BSc, Assistant Lecturer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்.<br>தொ.இ: G/14605 |

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 076 097 3120**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**



**யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை**

# சேவை நயப்பு விழா

**திருமதி.மனோகரி முருகமூர்த்தி**
**(B.A, PGDE, SLTS-I)**
**[பகுதித்தலைவர் - உயர்தரம்]**




## சேவை விபரம்

- நு/நல்லாயன் மகளிர் கல்லூரி - நுவரெலியா 18.01.1993 - 25.06.2002
- யா/மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை 26.06.2002 - 19.06.2014
- யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை 20.01.2014 - 20.04.2025

## வாழ்த்துப்பா

உலகம் புகழும் ஓங்குயர் விழுச்சீர்ப்
பண்டிதர் நாகலிங்கம் மகடு
தமிழாசிரியர் மனோகரி ரீச்சர்
தெல்லியூர் யூனியன் கல்லூரியினிலே
பன்னீராண்டு பண்பாய்
பணியைப் புரிந்து நிறைத்தார்
பூவுளார் போற்ற கல்லூரிச்
சமூகம் கருத்தொடு கூடி
வாழ்த்தினோம் நீடு நிறைவாய் வாழ்க!

எமது யா/ யூனியன் கல்லூரியில் பன்னிரு வருடங்கள் சேவையாற்றி பல நூற்றுக் கணக்கான மாணவர்களின் உயர்வுக்காகவும் அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப்போட்டிகளில் தேசிய ரீதியில் பல சாதனைகளை எமது கல்லூரி நிலை நாட்ட தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய பெருந்தகை **திருமதி. மனோகரி முருகமூர்த்தி** அவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவையை நன்றி கூறி வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

(C-2760)


வாழ்த்துவோர் : **ஆசிரியர் ஊழியர் நலன்புரிக் கழகம் யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## காசா போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

### ஈஸ்டர் வாழ்த்துச் செய்தியில் போப் பிரான்சிஸ்



(வத்திக்கான்)

காசாவின் நிலைமை பரிதாபகரமானது. பசியால் வாடும் மக்களுக்கு உதவ நாம் முன்வர வேண்டும். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் துன்பப்படும் மக்களுடன் தனது எண்ணங்கள் இருப்பதாகப் போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

ஈஸ்டர் திருநாளை யொட்டி கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் நேற்று மக்களை நேரடியாகச் சந்தித்தார்.

வாடிகன் சதுக்கத்தில் கூடிய ஆயிரக்கணக்கான மக்களை நோக்கிப் புனித பேதுரு பேராலயத்தில் இருந்தவாறு கையசைத்து ஈஸ்டர் செய்தியைப் பகிர்ந்துகொண்டார்.

88 வயதான போப், சுவாசக் கோளாறு காரணமாக கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி மருத்துவமனைக்குச் சென்ற அவர், 38 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கடந்த மார்ச் 23 அன்று வாடிகனுக்குத் திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# வெள்ளை மாளிகை

# முயன்ற ஆர்ப்பா

## ட்ரம்பிற்கு எதிராக வ




(வோஷிங்
அமெரிக்க
ட்ரம்பின் நட
நாயகத்துக்கு
எனக்கூறி
வடிக்கையை
முழுவதும் ம
டத்தில் குதித்

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற பின் பல்வேறு அதிரடி மாற்றங்களை அறிவித்து வருகிறார்.

அதில் வெளிநாட்டவர் வலுக்கட்டாய வெளியேற்றம், அரச ஊழியர்கள் பணிநீக்கம், கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி நிறுத்தம் ஆகியவை மக்களிடம் கோபத்தை ஏற்படுத்தின.

இவரது இந்த நடவடிக்கை ஜனநாயகத்துக்கு எதிராக இருப்பதாகக் கூறி நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில்

## முடிவுக்கு வந்த

### ஈஸ்டர் போர் நிறுத்தம்

(மொஸ்கோ)

மொஸ்கோவால் அறிவிக்கப்பட்ட 30 மணி நேர "ஈஸ்டர் போர் நிறுத்தம்" முடிவடைந்த சில மணி நேரங்களுக்குப் பின்னர், ஒரே இரவில் பல பகுதிகளில் ரஷ்ய ட்ரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக உக்ரைனின் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனால், உக்ரைனின் விமானப்படை கீவ் பிராந்தியத்திற்கும், கெர்சன், டினிப்ரோபெட்ரோவ்ஸ்க், செர்காசி, மைகோலைவ் மற்றும் சபோரிஜியாவிற்கும் பாதுகாப்பு எச்சரிக்கைகளை வெளியிட்டது.

எனினும், இந்தத் தாக்குதல்களில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்பட்டதா என்பது இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை.

இந்தத் தாக்குதல்கள் குறித்து ரஷ்ய இராணுவம் எந்தக் கருத்தும் தெரிவிக்க வில்லை.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்த போர் நிறுத்தம் மொஸ்கோ நேரப்படி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் காலாவதியானது.

இரு தரப்பினரும் போர் நிறுத்தத்தை மீறியதாக ஒருவரையொருவர் குற்றம் சாட்டினர்.

இதனிடையே, போரை முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்தி வரும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஞாயிற்றுக்கிழமை இரவு "ரஷ்யாவும் உக்ரைனும் இந்த வாரம் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்ளும்" என்று நம்புவதாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



## மன்னராட்சின

## நேபாளத்தில்

(காத்மாண்டு)

நேபாளத்தில், மீண்டும் மன்னராட்சியை அமுல்படுத்த வலியுறுத்தி நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

நம் அண்டை நாடான நேபாளம், இமயமலை அடிவாரத்தில் உள்ளது. நமக்கும், சீனாவுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த நாடாக உள்ள நேபாளத்தின் பிரதமராக ஷர்மா ஒலி உள்ளார். இவர், ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். இங்கு, முன்னர் மன்னராட்சி நடைபெற்று வந்த நிலையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# கயை முற்றுகையிட
# பாட்டக்காரர்கள்!

## வலுக்கும் போராட்டம்

(ிங்டன்)
ிக்க ஜனாதிபதி
நடவடிக்கை ஜன
ுக்கு எதிரானது
ி அவரது நட
யை எதிர்த்து நாடு
மக்கள் போராட்
ித்தனர்.



குதித்தனர்.

இந்நிலையில், நியூயோர்க், வோஷிங்டன் ஆகிய நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பேரணியாக சென்றனர்.

அப்போது ட்ரம்புக்கு எதிரான பதாகைகளை ஏந்திக் கொண்டு சென்ற அவர்கள் வெள்ளை மாளிகையையும் முற்றுகையிட முயன்றனர்.

இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவியது.

எனவே அப்பகுதியில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (நி-8)

## இண்டிகோ விமானத்துடன் டெம்போ மோதி விபத்து!





(டில்லி)

பெங்களூர் விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்த இண்டிகோ விமானத்தின் மீது டெம்போ ரக லொறியொன்று மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த சம்பவத்திற்கு விமான நிறுவனம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

லொறி சாரதியின் அலட்சியத்தால், நிறுத்தப்பட்டிருந்த விமானத்தின் மீது வாகனம் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான முழுமையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று இண்டிகோ ஏர்லைன்ஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடந்ததாகவும், இதனால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பெங்களூரின் கெம்பேகவுடா சர்வதேச விமான நிலைய செய்தித் தொடர்பாளர் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார். (நி-8)



## சியை அமுல்படுத்தக்கோரி
## தில் மீண்டும் போராட்டம்

2008இல் நடந்த போராட்டங்கள் காரணமாக மக்களாட்சி அமுலுக்கு வந்தது.

இருப்பினும், 17 ஆண்டுகளில் ஒரு பிரதமர் கூட ஐந்து ஆண்டுகால ஆட்சியை முழுமையாக நிறைவு செய்யவில்லை. அரசியல் கூட்டணி குழப்பம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக, 17 ஆண்டுகளில், 13 பிரதமர்களை நேபாளம் கண்டுள்ளது.

தற்போதைய பிரதமர் ஷர்மா ஒலியின் ஆட்சியிலும் மக்கள் திருப்தியடையாததால், அங்கு மீண்டும் மன்னராட்சியை அமுல்படுத்த வலியுறுத்திக் கடந்த மாத இறுதியில் போராட்டம் வெடித்தது. தடை செய்யப்பட்ட பகுதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் புகுந்ததை அடுத்து கண்ணீர் புகைக் குண்டுகள் வீசி கலைக்கப்பட்டனர்.

அப்போது வெடித்த வன்முறையில் இருவர் கொல்லப்பட்டனர். முன்னாள் மன்னர் ஞானேஷ்வரின் ஆதரவாளர்கள் இந்தப் போராட்டத்தை கட்டவிழ்த்ததாக புகார்கள் எழுந்தன. பதற்றத்தைத் தணிக்க, பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட அரசின் முக்கிய கட்டடங்கள் உள்ள பகுதிகளில் போராட்டம் நடத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், மன்னராட்சியை அமுல்படுத்த வலியுறுத்தியும், நேபாளத்தை ஹிந்து நாடாக நிறுவக் கோரியும் அங்கு முக்கிய எதிர்க்கட்சியாக திகழும் ஆர்.பி.பி., எனப்படும் ராஷ்ட்ரீய பிரஜாதந்திர கட்சியினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்தனர். தடை செய்யப்பட்ட பகுதிகளில் இந்த போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லம், பார்லிமென்ட் கட்டடம் உள்ளிட்ட பகுதிகளில் திரண்ட அக்கட்சியினர், அரசுக்கு எதிராகப் பேரணியை நடத்தினர். அப்போது, மன்னராட்சியை நிறுவ வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

பிஜ்லிபஜார் - பனேஷ்வர் பகுதியில் நடந்த போராட்டத்தில், ஆர்.பி.பி., கட்சியின் தலைவர் ராஜேந்திர லிங்டன், மூத்த தலைவர்கள் பசுபதி ஷம்ஷேர் ராணா உட்பட 1,000 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

மன்னராட்சியை அமைக்கும் வரை தங்கள் போராட்டம் தொடரும் என, ஆர்.பி.பி., கட்சியினர் அறிவித்தனர். நயா பனேஷ்வர் பகுதியில் மன்னராட்சியை அமுல்படுத்த வலியுறுத்தி மற்றொரு குழுவும் போராட்டத்தில் ஈடுபட்டதால் பதற்றம் அதிகரித்தது.

காத்மாண்டுவி[illegible] றன்ற இடங்களில் போ[illegible]ாட்டம் [illegible] நிலையில் அவர் றைக் கட்டு[illegible]டுத்த முடியாமல் பொ[illegible]ஸார் திணறினர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத்தூதரைச் சந்தித்த மிலிந்த மொரகொட

(கொழும்பு)

இந்தியாவுக்கான முன்னாள் உயர்ஸ்தானிகரும் பாத்ஃபைண்டர் அறக்கட்டளையின் நிறுவனருமான மிலிந்த மொரகொட, இலங்கைக்கான சீனத் தூதர் கி சென்ஹோங்கைச் சந்தித்து, சீன - இலங்கை உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதித்துள்ளார்.

தூதர் கி யின் இல்லத்தில் நடைபெற்ற மதிய உணவு விருந்தின் போது, இரு தரப்பினரும் இந்த விவாதிப்பை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய நிலைமை, சீன - இலங்கை உறவுகள், சீன முதலீட்டாளர்களுக்கான இலங்கையில் முதலீட்டுச் சூழல் மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது. (நி-8)

# சாமர சம்பத்துக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை பதுளை நீதவான் நீதிமன்றம் எதிர்வரும் மே 5 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, கடந்த மார்ச் 27 ஆம் திகதி, இராஜாங்க அமைச்சராக இருந்த காலத்தில் சுமத்தப்பட்ட 3 ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில், வாக்குமூலம் பதிவு செய்த பின்னர், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டார். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 450 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 450 | 350 | 400 |
| தக்காளி | 550 | 500 | 600 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 290 | 300 | 250 | 200 |
| கோவா | 350 | 350 | 400 | 350 | 400 |
| கரட் | 800 | 500 | 500 | 500 | 600 |
| பூசணி | 250 | 230 | 200 | 240 | 250 |
| புடோல் | 200 | 250 | 200 | 200 | 400 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 120 | 150 | 150 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 350 | 200 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 350 | 200 | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 350 | [illegible] | 200 | 250 | 400 |
| பீற்றூட் | 350 | 500 | 400 | 400 | 600 |
| கறிமிளகாய் | 600 | 650 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2300 | 3000 | 1800 | 2500 | 2800 |
| போஞ்சி | 400 | 500 | 400 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 450 | 350 | 300 | -- | 380 |
| கீரை – 1 பிடி | 120 | 50-100 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 150 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 150 | 150-200 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 250 | -- | 300 | -- | 600 |
| முள்ளங்கி | 150 | 120 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | -- |

## இன்று ஒரு தகவல் 362



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உயர்ந்த பண்பு

அடுத்தவர்கள் நிலத்தை நாம் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற காரணத்துக்காகத் தான் தேசங்கள் சண்டை போட்டுகொள்கின்றன. அப்படி ஒரு போர் நடந்த சமயம் பிரான்ஸ் வீரர்கள் ஜேர்மனியில் முகாம் இட்டிருந்தார்கள்.

அவர்கள் படையில் நிறையக் குதிரைகள் உண்டு. அதற்கு எல்லாம் ஆகாரம் தேவைப்பட்டது.

புது இடம் என்ன செய்வது என்று யோசித்தார் படைத்தளபதி. ஒரு படை அதிகாரியைக் கூப்பிட்டார்.

குதிரைகளுக்குத் தேவையான புல்லைக் கொண்டுவருமாறு ஆணையிட்டார். உடனடியாக அவ் அதிகாரி தன்னிடமிருந்த படை வீரர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு சென்றார். அங்கே மரங்கள் மட்டும்தான் இருந்தது. அந்த பகுதி ஒரு சிறிய பள்ளத்தாக்கு சுற்றிலும் குன்றுகள். சற்றுத் தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது.

எல்லோரும் அங்கே போனார்கள் அந்த அதிகாரி தன்னுடைய படை வீரர்களில் ஒருத்தனை அழைத்து அந்த வீட்டுக் கதவைத் தட்ட சொன்னார்.

தட்டியவுடன் குடிசையின் கதவு திறந்தது. வெள்ளைத் தாடியுடன் ஒரு வயதான தாத்தா வெளியே வந்தார்.

படைத்தலைவர் அவரைப் பார்த்து பெரியவரே எங்கள் குதிரைகளுக்கு புல் எங்கே கிடைக்கும் இடத்தைக் காட்டுங்கள் நாங்கள் களைகின்றோம் என்றார்.

சரி என்னோடு வாருங்கள் என்றார் அவர். பின் எல்லோரும் புறப்பட்டார்கள். அந்தத் தாத்தா அவர் பாட்டிற்கு காடு, மேடு எல்லாம் நடந்து போய்க்கொண்டிருந்தனர். வழியிலே ஒரு புல் நிலம் இருந்தது படைத்தலைவர் அந்த இடத்தைப் பார்த்ததும். இது போதும் இங்கே களையலாமே என்றார்.

இங்கே வேண்டாம் இன்னும் சற்றுத்தூரம் செல்வோம் என்றார் . சிறிது நேரம் பொறுத்துக்கொண்டு என் பின்னால் வாருங்கள் என்று சொல்லிக் கொண்டு போய்கொண்டிருந்தார் அந்தத் தாத்தா. படைவீரர்களும் சரி என்று சொல்லிகொண்டு அவர் பின் சென்றார்கள்.

அடுத்தபடியாகவும் புல்லைக் களைவதற்கு இரண்டு, மூன்று இடங்கள் இருந்தது. அங்கேயும் புல் இருந்தது இருந்தாலும் அதுஎல்லாம் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு வேறு ஒரு புல் நிலத்துக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போனார்.

அங்கே ஒரு நிலத்தைக் காட்டி இதில் புல்லை வெட்டிகொள்ளுங்கள் என்றார் உடனே அந்தப் படைவீரர்கள் எல்லோரும் புல்லை களைந்து மூட்டை கட்டிகொண்டார்கள். அதன்பின் குதிரை மேலே ஏறி புறப்பட்டார்கள். அந்தச் சமயத்திலே அந்தப் படைத் தலைவர் இந்தத் தாத்தாவைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

பெரியவரே! அநாவசியமாக எங்களை இவ்வளவு தூரம் கூட்டிகொண்டு வந்தீர்கள் அங்கேயே வரும் வழியிலே புல் நிலங்கள் நிறைய இருந்ததே அதிலேயே புல்லைக் களைந்திருக்கலாமே என்றார்.

அதற்கு அந்த பெரியவர், உண்மைதான் ஆனால் அந்த நிலம் என்னுடையது இல்லை. இதுதான் என்னுடைய நிலம் என்றார்.

பெரியவருடைய இந்தப் பண்பு அந்த அதிகாரியை ஆச்சரியப்படுத்தியது. (பிரான்ஸ் எழுத்தாளர் பெர்னார்தென் தெசென் பியர் என்பவர் எழுதிய ஒரு குட்டி கதை இது)

இந்தப் பண்பு நம்மில் எத்தனை பேரிடம் உள்ளது? அடுத்தவர் நிலத்தைக் காட்டி களைந்து கொண்டு போங்கள் என்று சொல்பவர்கள் தான் அதிகம் இன்று.

ஒருத்தன் ஒரு குதிரை வைத்திருந்தான் அதை எந்நேரமும் வண்டியிலேயே வைத்திருந்தான்.

இரவு பகலாக அப்படியே நின்றுகொண்டிருக்கும். தரையிலேயே உறங்கவிடுவதில்லை. இதைப் பார்த்து பரிதாபப்பட்ட ஒருவர் சொன்னார். உனக்கு ஜீவகாருண்யமே கிடையாதா? எப்பொழுது பார்த்தாலும் வண்டியிலேயே பூட்டி நிறுத்தி வைத்துள்ளாயே அவிழ்த்துவிட்டால்தான் என்ன? என்றார்

குதிரையை அவிட்டு விட்டால் பொத் என்று கிழே விழுந்துவிடும் சேர் என்றார். அதற்கு ஒரு ஆதார பலம் வேண்டும் என்றார். அதனால்தான் [illegible]ளேன் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பிக்கு வாக்களிப்பதும் சொந்த காசில் சூனியம் வைப்பதும் ஒன்றே

## முன்னாள் எம்.பி சந்திரகுமார்



(தருமபுரம்)

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு அதாவது ஜேவிபிக்கு வாக்களித்தால் அது தமிழ் மக்கள் தங்களுடைய சொந்த காசில் சூனியம் வைத்துக் கொண்டதற்கு நிகராகி விடும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணியில் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த உள்ளூராட்சி தேர்தல் மிக முக்கியமான காலக் கட்டத்தில் இடம்பெறுகிறது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை தொடர்ந்து உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.

எனவே உள்ளூர் அதிகாரங்கள் அந்தந்த உள்ளூர் தரப்பினர்களிடமே இருக்க வேண்டும். அதிகார பகிர்வுக்காக போராடிய, அதற்காக பல தியாகங்களை செய்த இனம் நாங்கள். அந்த தியாகங்களுக்கு ஈடாக தீர்வுகள் இதுவரை கிடைக்காத போதிலும் கிடைத்த இந்த உள்ளூர் அதிகாரத்தையாவது நாம் தொடர்ந்தும் எங்களுக்குள் வைத்திருக்க வேண்டும். அதுவே தமிழ் இனத்தின் எதிர் கால அரசியல் உரிமைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நகர்வுகளுக்கு பலம் சேர்க்கும்.

ஆகவே தமிழ் மக்கள் நாட்டில் ஏற்பட்ட ஒரு பொதுவான ஒரு அலையில் சிக்குண்டு செல்வார்கள் எனில் அந்த அலை தமிழ் மக்களை சிதைத்து சின்னாபின்னமாக்கிவிடும். இந்த அலை என்பது இந்த நாட்டில் உள்ள சிறுபான்மை இனங்களை குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களை மிக மோசமாக பாதிக்கும் அலை, இந்த அலைக்குள் சிக்குண்டால் ஒரு போதும் கரை சேர முடியாது போய்விடும்.

எனவே வருகின்ற உள்ளூராட்சி தேர்தலில் எங்கள் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் சங்கு சின்னத்தில் மக்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உள்ள மக்களுக்காக அர்ப்பணிபோடு பணியாற்றக் கூடிய வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களை ஆதரித்து வாக்களித்து வெற்றிபெற செய்யுங்கள் எனத் தெரிவித்தார். (நி-8-316)

## முல்லையில் திருட்டு

# சி.சி.ரி.வி உதவியுடன் சந்தேக நபர் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவில் கோப் சிற்றியில் திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. முல்லைத்தீவு கோப் சிற்றியில் கடந்த 17 ஆம் திகதி கூரைப்பகுதி உடைக்கப்பட்டு அங்கிருந்து பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒன்றும் 52,000 ரூபாய் பணமும் திருடப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த வங்கி நிர்வாகத்தினரால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனையடுத்து குறித்த கிராமியக் கூட்டுறவுச்சங்கத்தில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கருவியின் உதவியுடன், திருடப்பட்டதாகக் கூறப்படும் சந்தேக நபரின் முகநூலில் போடப்பட்ட தொலைபேசிப் பதிவினையும் அடித்தளமாகக் கொண்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை குறித்த திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொக்குளாய் பகுதியினைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் ஆவார். அத்து டன் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (நி-3-8-299)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப்பெயர் மாற்றம்
### 73, மூளாய் வீதி 4 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-11

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 11, மூளாய் வீதி, 4 ஆம் ஒழுங்கையிலுள்ள இல: 73 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **வைரமுத்து தம்பிநாயகம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை **சின்னத்துரை நவரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.இராமலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4124/06.11.1973ஆம் இலக்க உறுதியால் **கணபதிப்பிள்ளை இரத்தினமும் பெண் இரஞ்சிதமலரும், சின்னத்துரை நவமலரும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றைய பகுதியினை **தம்பிநாயகம் கைம்பெண் ஹரியற்உம் தம்பிநாயகம் ஏனஸ்ற் அரியநாயகமும், வீரகுட்டி முருகேசப்பிள்ளையும் பெண் அரியசோதியும், தம்பிநாயகம் மகள் ஹனாஅரியமலரும், தம்பிநாயகம் றொபேட் தவநாயகம் பெண் இந்திராணியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தில் சொரியலாய் ½ பங்கானது தம்மில் 1ஆம் பெயரினரின் கணவரும், 2ம், 4ம், 5ம் பெயரினர்களின் தந்தையும், 3ம், 6ம் பெயரினர்களின் மாமனாரும் ஆகிய வைரமுத்து தம்பிநாயகத்திற்கு 1925ஆம் ஆண்டு ஐப்பசி 19 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு சபாபதிப்பிள்ளை நாகலிங்கம் அவர்கள் முகதாவில் 552ஆம் இலக்கத்தில் எழுதப்பட்ட நன்கொடை உறுதியின் பிரகாரம் தந்தைவழி முதுசப்பங்காக வந்தடைந்தது எனவும், குறித்த தம்பிநாயகம் 1965.04.13ஆம் திகதி காலஞ்செல்ல அவரது உரித்தாளர்களான தாங்கள் அனைவரும் குறித்த ஆதனத்தில் அவருக்குரிய சொரியலாய் ½ பங்கினை இற்றை வரையில் எதுவித சோந்தை, தடை, குறுக்கீடுமின்றி ஆட்சி பண்ணி வருவதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் 4340/14.09.2002ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்கள்.

**சின்னத்துரை கணேசலிங்கமும் பெண் இராஜேஸ்வரியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4341/14.09.2002ஆம் இலக்க உறுதியால் குறித்த **சின்னத்துரை நவரத்தினமும், தம்பிநாயகம் கைம்பெண் ஹரியற்உம், தம்பிநாயகம் ஏனஸ்ற் அரியநாயகமும், வீரகுட்டி முருகேசப்பிள்ளையும் பெண் அரியசோதியும், தம்பிநாயகம் ஹனாஅரியணியும், தம்பிநாயகம் றெபேட் தவநாயகம் கைம்பெண் இந்திராணியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி முழு ஆதனத்தினையும் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **சின்னத்துரை கணேசலிங்கமும் பெண் இராஜேஸ்வரியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **சின்னத்துரை கணேசலிங்கமும் பெண் இராஜேஸ்வரியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**


# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முன்னின்று செயற்பட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைத்தலைவர் அன்னலிங்கம் நடனலிங்கம் என்பவரின் மோட்டார் சைக்கிள், அண்மையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களால் எரியூட்டப்பட்டது.

குறித்த சம்பவத்தைக் கண்டித்து முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம், மீனவ ஒத்துழைப்பு இயக்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், இவ் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றதுடன் ஆர்ப்பாட்டக் காரர்களிடமிருந்து மகஜர் ஒன்றினையும் பெற்றுக்கொண்டார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், தடை செய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம், குறிப்பாக மீனவ இளைஞர்கள் தற்போது ஒன்றுசேர்ந்து செயற்பட்டு வருக்கின்றனர்.

இத்தகைய சூழலில் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் முன்னின்று செயற்பட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணையத்தலைவரின் மோட்டார் சைக்கிள் அண்மையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களால் திருடப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் உரியவர்கள் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளபோதும், இது வரை பொலிஸார் உரிய சட்டநடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. இந்தவிடயத்தில் பொலிஸார் சட்டம் ஒழுங்கினைப் பாதுகாக்கத் தவறியுள்ளதாகக் கருதுகின்றேன்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி செயலகம், பிரதமர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோரிடம் இந்த விடயத்தினைத் தெரியப்படுத்துவதுடன், பாராளுமன்றத்திலும் இந்த விடயத்திற்கு குரல்கொடுப்பேன் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8-299)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 753



அல்லது மனத்தைக் கல்லாகச் செய்து கொண்டு உயிரோடிருப்பாள். பகைவனைப் பழிக்குப் பழி வாங்குவதற்காக மட்டுமே உயிரை வைத்துக் கொண்டிருப்பாள்!" இதைக் கேட்ட ஆதித்த கரிகாலன் ஒரு நெடிய பெருமூச்சு விட்டு, தாத்தா! நான் போய் வரவா? என்றான்.

அவசியம் போகத்தான் வேண்டுமா?அதைப்பற்றி இன்னும் என்ன சந்தேகம், தாத்தா! பாதி வழிக்கு மேலே வந்தாகிவிட்டதே.

ஆம், பாதி வழிக்கு மேல் வந்தாகிவிட்டது நானும் முதலில் உன்னைப் போக வேண்டாம் என்றேன்.அப்புறம் போகும்படி சொன்னேன். உன் தம்பியைப் பற்றிய செய்தி கேட்ட பிறகு நீ போவதே நல்லது என்று தீர்மானித்தேன். அருள்மொழி வர்மன் இறந்திருப்பான் என்று நான் நம்பவில்லை"

"நானும் நம்பவில்லை" உன் தந்தையின் இளம் பிராயத்தில் சில காலம் அவர் இருக்குமிடம் தெரியாமலிருந்தது. அதுபோல் அருள்மொழியும் ஏதேனும் ஒரு தீவில் ஒதுங்கியிருப்பான். சில நாளைக்கெல்லாம் வந்து சேர்வான் என்றே நம்புகிறேன்! ஆனாலும் அச்செய்தி சோழ நாடெங்கும் கொந்தளிப்பை உண்டாக்கி விட்டிருக்கிறது என்று அறிகிறேன். உன் பெற்றோர்களும் கவலையில் ஆழ்ந்திருப்பார்கள். இச்சமயம் அவர்கள் பக்கத்தில் இருந்து நீ ஆறுதல் சொல்லுவது அவசியம். அப்படிப் போகும்போது பழுவேட்டரையர்களின் விரோதியாகப் போவதைக் காட்டிலும், சிநேகமாய்ப் போவது நல்லது. ஆகையினால்தான் நீ சம்புவரையர் அழைப்புக்கு இணங்கிப் போவதற்குச் சம்மதித்தேன். அவன் வேண்டுமென்றே என்னை அழைக்கவில்லை அழைத்திருந்தால் நானும் வந்திருப்பேன்.

"தாத்தா! எனக்காக அவ்வளவு தூரம் நீங்கள் பயப்படுகிறீர்களா? என்னை அவ்வளவு கையினாலாகாதவன் என்று எண்ணி விட்டீர்களா? என்று கேட்டான் கரிகாலன்.

"இல்லை, தம்பி! இல்லை! நீ எத்தகைய வீராதி வீரன் என்பது எனக்குத் தெரியாதா? கொடிய ஆயுதங்களைத் தரித்த பதினாயிரம் பகைவர்களின் நடுவில் நான் உன்னைத் தன்னந்தனியாக நம்பி அனுப்புவேன். ஆனால் கண்ணீர் பெருக்கி உன் மனத்தைக் கலங்கச் செய்யக் கூடிய ஒரு பெண்ணின் முன்னால் உன்னைத் தனியாக அனுப்புவதற்கு மட்டும் பயப்படுகிறேன்."

"சம்புவரையர் மகள் அப்படியெல்லாம் ஜாலவித்தையில் தேர்ந்தவள் என்று நான் கேள்விப்படவில்லை, தாத்தா! ஆண் மக்கள் முன்னால் வருவதற்கே அஞ்சக்கூடிய பெண்ணாம் அவள் கந்தமாறன் சொல்லியிருக்கிறான். நானும் அப்படியெல்லாம் அவசரப்பட்டுத் தாய் தந்தையர் சம்மதம் இல்லாமல் ஒரு காரியத்தை செய்துவிட மாட்டேன். உங்களுடைய பழங்குடியில் பிறந்த இரண்டு பெண்கள் இன்னும் மணமாகாமல் இருக்கிறார்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.


"ஆதித்தா, அதைப் பற்றிச் சிந்தனையே எனக்கு இல்லை. என் மூத்த மகனுடைய பெண்கள் இரண்டு பேர் திருமணப் பிராயம் வந்தவர்கள் இருக்கிறார்கள் தான். ஆனால் அவர்களை உன் கழுத்தில் கட்டும் எண்ணம் எனக்குச் சிறிதும் இல்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கெடுவார் கேடு நினைப்பார்



ஓர் காட்டில் கெட்ட சுபாவமுள்ள தேள் ஒன்று வசித்து வந்தது. அந்தக் காட்டின் நடுவில் ஒரு நீரோடை இருந்தது.

அந்தத் தேளுக்கு இக்கரையில் இருந்து அக்கரைக்கு போக வேண்டி இருந்தது. அக் கரைக்குப் போவதற்காக அந்த நீரோடையில் இருக்கும் பெரிய மீன்கள், நண்டு, தவளை போன்றவைகளிடம் தேள் உதவி கேட்டது. ஆனால் அந்தப் பொல்லாத தேள் தமக்குக் கொட்டி விடும் என்று அவை மறுத்து விட்டன.

எப்படி நீரோடையைக் கடப்பது என்று தேள் யோசித்துக் கொண்டு இருந்தபோது அந்த நீரோடையில் ஆமை ஒன்று வந்து கொண்டிருந்தது. ஆமையைக் கண்ட தேள்.

ஆமையாரே! நான் அக்கரைக்குச் செல்ல வேண்டும் என்னை அங்கு கொண்டு போய் விட்டு விடுவீரா? என்று கேட்டது.

நானும் அக்கரைக்குத்தான் போகிறேன், என் முதுகில் ஏறிக் கொள்ளும் உம்மை நான் அக்கரையில் விட்டு விடுகிறேன்! என்றது ஆமை. தேளும் ஆமையின் முதுகில் ஏறிக் கொண்டது

ஆமை நீரில் நீந்திச்செல்ல அரம்பித்தது சிறிது தூரம் தான் ஆமை சென்றிருக்கும் தேளுக்கு ஒரு யோசனை வந்தது. நான் பல பேரைக் கொட்டியிருக்கிறேன்.அவர்கள் வலியால் துடித்ததையும் பார்த்திருக்கின்றேன். ஆனால். நான் ஒரு நாளும், ஆமைக்கு கொட்டவில்லை. இந்த ஆமையைக் கொட்டினால் எப்படித் துடிக்கும்? இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடையாது .என்று ஆமைக்கு கொட்டிப் பார்க்க நினைத்தது

தேள் ஆமையின் முதுகில் கொட்டியது . ஆனால் ஆமை பேசாமல் போய்க்கொண்டிருந்தது.

உடனே தேள் ஆமையைப் பார்த்து ஆமையாரே! உமது முதுகு கடினமாக இருக் கிறதே. உமது உடம்பில் வலியே வருவதில்லையா? என்று கேட்டது.

தேளின் கெட்ட எண்ணத்தைப் புரிந்து கொள்ளாத ஆமை. எனது முதுகு கடினமான ஓட்டினால் மூடப்பட்டுள்ளது அதனால் எனக்கு அந்த இடத்தில் வலியே வருவதில்லை.

ஆனால் எனது கழுத்துப்பக்கம் மென்மையாக இருக்கும் . இதில் தான் எனக்கு வலிகள் காயங்கள் ஏற்படும் என்று சொன்னது ஆமை.

ஓகோ அப்படியா?என்று கேட்ட தேள் மெதுவாக ஆமையின் கழுத்துப் பகுதியை நோக்கிச் சென்றது . கழுத்தில் இருந்து தலைப்பகுதிக்குச் சென்ற தேள் ஆமைக்கு கொட்ட ஆரம்பித்தது.

தலையில் ஏதோ குத்தியதால் விடுக்கென்று தலையை உள்ளே இழுத்துக் கொண்டது ஆமை. தேள் நீரோடையில் விழுந்து விட்டது.

தனக்கு உதவி செய்த ஆமைக்கு கேடு விளைவிக்க நினைத்த தேள். தண்ணீரில் மூழ்கி இறந்தது .ஆமை கரையை நோக்கி நீந்திச் சென்றது.

ஒருவர் எவ்வித பலனையும் எதிர்பாராமல் எமக்கு உதவி செய்தாராயின்,அவரின் உதவியை நாம், எம் வாழ்நாளில் என்றுமே மறந்துவிடலாகாது. அவருக்கு நன்றியுடையவனாக இருத்தல் வேண்டும். மாறாக அவருக்கு கேடு செய்ய நினைப்போமாயின் அது எம்மையே வந்து சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் நேர்மை இருந்தால் நீங்கள் கூற விரும்புவதை எப்படிக் கூறுவது என கவலைப்படத் தேவையில்லை. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தண்டனை வழங்காமல் தாமதிப்பதன் காரணம் யாதோ!

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவே ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பொலநறுவையில் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறிய மேற்போந்த விடயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

ஆம், ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் இந்த நாட்டில் நடந்த மிக மோசமான – மனித குலத்தால் வெறுக்கத்தக்க ஈனச் செயலாகும்.

இறை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீது ஈவுஇரக்கமின்றித் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதை அப்படியே விட்டுவிட்டுக் கடந்து செல்ல முடியாது.

எனவே 277 அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைக் காவு கொண்ட மேற்படி ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு, தாக்குதலின் சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்.

எனினும் ஈஸ்ரர் தாக்குதல் தொடர்பில் ஆட்சித் தலைவர்கள் உட்படப் பலரும் கருத்துரைக்கின்றனரே தவிர, தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியவர்களைக் கைது செய்து அவர்களை அம்பலப்படுத்துவதில் எல்லோருமே பின்னடிப்பதைக் காண முடிகிறது.

ஆம், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறியதிலிருந்து அந்தத் தாக்குதல் யாருடன் சம்பந்தப்பட்டது என்பது வெளிப்படுத்தப்படுகிறது.

உண்மையில் தென்பகுதியில் ஏற்பட்ட அரகலப் போராட்டம் என்பது பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டதல்ல.

மாறாக ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சில உண்மைத் தகவல்கள் வெளிவந்ததன் காரணமாகவே அரகல போராட்டம் உச்சம் பெற்றது.

இருந்தும் கெடு காலம் போல கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டுத் தப்பியோட, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

இங்குதான் ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டன.

அதாவது, ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலை முதன்மைப்படுத்தினால், பாராளுமன்றத்தில் தனக்கான ஆதரவு இல்லாமல் போய்விடும் என்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க, 277 பொதுமக்களின் உயிர்களைக் காவுகொண்ட ஒரு பெரும் துயரச் சம்பவத்தைக் கண்டுகொள்ளாமல் மௌனமாகினார்.

அதுதவிர, ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் திசை திருப்பங்களும் கனகச்சிதமாக மேற்கொள்ளப்பட்டன.

இவற்றின் காரணமாகவே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

ஆக, இப்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலின் பின்னணியை ஓரளவுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

இங்கு வெளிப்படுத்தல் மட்டும்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுத் தராது என்பதால், குற்றவாளிகள் தண்டனை பெற வேண்டும். அதற்கான வழிவகைகளை ஜனாதிபதி அநுர விரைந்து செய்வது அவசியம்.

# ஏனைய நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேற இலங்கை மட்டும் ஏன் பின்னோக்கிச் செல்கிறது?

## அநுரவிடம் விளக்கம் கோருகிறார் ரணில்

(கொழும்பு)

பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகள் வளர்ச்சியடைந்து செல்லும் நிலையில், இலங்கை மட்டும் ஏன் பொருளாதாரத்தில் பின்னோக்கிச் செல்கிறது? நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுத் திங்கட்கிழமை (21) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சீனாவிற்குப் பின்னர் சர்வதேச அளவில்மிகவும் சக்திவாய்ந்த அரசாங்கம் எங்களிடம் உள்ளது. ஏனென்றால் ஜனாதிபதி அநுர ஒரு கடிதம் அனுப்பியதும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொண்ணூறு நாட்களுக்கு வரிகளை ஒத்திவைப்பதாகக் கூறினார் என்கின்றனர். இவ்வாறான பொய்களுக்கு இனியும் ஏமாறக்கூடாது. நாம் நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் கடன் பிரச்சினைக்குத் தீர்வினை வழங்கினோம். எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய 80 பில்லியனில் 3 பில்லியன் இரத்துச் செய்யப்பட்டது. 25 பில்லியன் 20 ஆண்டுகள் கால அவகாசம் நீடிக்கப்பட்டது.

அதற்கமைய 28 பில்லியனுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்பட்டது. 2028 இலிருந்து கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. அன்று 6 பில்லியனாகக் காணப்பட்ட இருப்பு தற்போது 6.4 பில்லியனாக அதிகரித்துள்ளது.

2024இல் தேசிய உற்பத்தி வருமானம் 5 சதவீதத்தால் அதிகரித்தது. ஆனால் உலக வங்கியின் அறிக்கைக்கு அமைய இது 3.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. ட்ரம்ப்பின் வரிப் பிரச்சினைக்கு முன்னதாகவே இந்த வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகள் வளர்ச்சியடைந்து செல்லும் நிலையில், இலங்கை பின்னோக்கிச் செல்கிறது.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என்றார். (ம-7)

## ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது அவசியம்

### தேர்தல்கள் ஆணைக்குழு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூல வாக்கைப்பதிவு செய்கையில் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட ஆவணத்தை எடுத்துச் செல்வது கட்டாயமானது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி வாக்காளரது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம், செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, தேர்தல் ஆணைக் குழுவால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஆட்பதிவுத் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுகின்ற தகவல்களை உறுதி செய்யும் கடிதம் ஆகிய ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பாப்பரசரின் மறைவிற்கு ஜனாதிபதி இரங்கல்

(கொழும்பு)

புனித பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இரங்கல் தெரிவித்துள்ளார். குறித்த இரங்கல் செய்தியை தனது எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் அவர் பதிவிட்டுள்ளதாவது, புனித பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு இலங்கை மக்கள் சார்பாக எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைதி, இரக்கம் மற்றும் மனிதநேயம் மீதான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு உலகில் ஒரு அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவரது இரக்கம், நீதி மற்றும் மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் ஆகியவற்றின் மரபு எதிர்வரும் தலைமுறைகளுக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கட்டும் எனப் பதிவிட்டுள்ளார். (ம-7)

## காசி விநாயகருக்கு இன்று இரதோற்சவம்

தெல்லிப்பழை வீணாக்கடவை காசி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை (22) காலை 09.30 மணியளவில் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

அத்துடன் நாளை புதன்கிழமை(23) முற்பகல் 10.00 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் மாலை 06.00 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ம-7)

## மேர்வின் சில்வாவின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட நான்கு பேரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இருப்பினும் இந்த சம்பவத்தில் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர இன்னும் கைது செய்யப்படவில்லை.

எனவே முன்னாள் அமைச்சரைக் கைது செய்து எதிர்வரும் 5 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மஹர நீதவான், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார். (ம-7)

## பிணை நிபந்தனையை மீறினார் தென்னகோன்

### சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல்

(மாத்தறை)

மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற பிணை நிபந்தனைகளை மீறி நீதிமன்றத்திலிருந்து பிணையில் வெளியேறிய குற்றச்சாட்டில் இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் அவரை நீதிமன்றத்திற்கு வெளியே அழைத்துச் செல்லப் பயன்படுத்திய காரின் உரிமையாளரையும் ஏப்ரல் 25 ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 10 ஆம் திகதி பிணை வழங்கப்பட்ட பின்னர் தேசபந்து தென்னகோன் மாத்தறை நீதவான் நீதிமன்ற வளாகத்திலிருந்து வெளியேறிய போது நீதிமன்ற உத்தரவுகளை மீறியதாகக் கூறி, சட்டமா அதிபர் நேற்று (21) நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விசுவாவசு வருஷ' புத்தாண்டு பலன்கள்

## கடுமையான சூழ்நிலைகளையும் திறம்பட சமாளிக்கும் விருச்சிக ராசி நேயர்களே!



**கிரகநிலை-** சுக ஸ்தானத்தில் சனி - பஞ்சம ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), புதன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன் - களத்திர ஸ்தானத்தில் குரு - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் - லாப ஸ்தானத்தில் கேது - அயன சயன போக ஸ்தானத்தில் சந்திரன் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 26-04-2025 அன்று ராகு பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று கேது பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 02-07-2025 அன்று சனி பகவான் வக்கிர நிலை ஆரம்பம். 17-11-2025 அன்று சனி பகவான் வக்கிர நிவர்த்தி அடைகிறார் .

06-03-2026 அன்று சனி பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11-05-2025 அன்று குரு பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

08.10.2025 அன்று குரு பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-11-2025 அன்று குரு பகவான் வக்கிரம் ஆரம்பம் . 21-12-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் குரு பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-03-2026 அன்று குரு பகவான் வக்கிர நிவர்த்தி.

**பலன்கள்:** எந்த சூழ்நிலையிலும் எடுத்த வேலையினை கொடுத்த நேரத்தில் செய்து முடிக்கும் விருச்சிக ராசி நேயர்களே! இந்த ஆண்டு குழந்தைகளால் மனதில் மகிழ்ச்சி உண்டாகும். சிலருடைய குழந்தைகள் வெளிநாடு சென்று கல்வி பயிலும் வாய்ப்புகளும் கிடைக்கும். செய்தொழில் சிறக்கும்.

புதிய பொறுப்புகளையும் ஏற்று நடத்துவீர்கள். பயங்கள் மறைந்து கவலைகளின்றி காணப்படுவர். எப்படிப்பட்ட கடுமையான சூழ்நிலைகளையும் திறம்பட சமாளிக்கும் திறன் இருக்கும். எதிராக நின்ற போட்டியாளர்கள் படுதோல்வி அடைவர். உடன் பிறந்தோர் அன்புடன் நடந்து கொள்வார்கள்.

துணிச்சலான காரியங்களிலும் ஈடுபாடு உண்டாகும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். புதியவர்களை நம்பி வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். தன் நம்பிக்கையே தாரகமந்திரம் என்கிற ரீதியில் பணிபுரிவீர்கள்.

திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண யோகமும் குழந்தை வேண்டி எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு குழந்தை பாக்கியமும் கிடைக்கும். உங்களுடன் பாராமுகமாக நடந்து கொண்டிருந்த நண்பர்களும் கூட்டாளிகளும் தற்போது நேசக்கரம் நீட்டுவர்.

உங்கள் சொல்கேட்டு நடந்து கொள்வதுடன் உங்களின் மதிப்பையும் உயர்த்திவிடுவர். சமூகத்தில் நல்ல நிலைக்கு வருவீர்கள். உங்களுக்கு கீழ் வேலை செய்பவர்களும் உங்களது கருத்தறிந்து நடந்து கொள்வார்கள். உடலாரோக்கியம் சிறக்கும். உடலை கச்சிதமாக வைத்துக்கொள்ள தேவையான உடற்பயிற்சிகளைச் செய்வீர்கள்.

சிறந்த பேச்சாளர் என்கிற நிலைக்கு உயர்வுண்டாகும். பணம் பல வழிகளில் வந்து சேரும். அரசிடமிருந்து ஆதாயங்களையும் சலுகைகளையும் பெறுவர். நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால் பாதிப்புகளிலிருந்து விடுபட்டு விடுவர். தீயவர்களின் சகவாசம் மறைந்து நல்லவர்களின் தொடர்பு தானாகவே தேடி வரும் காலகட்டமிது என்றால் மிகையாகாது.

**உத்தியோகஸ்தர்கள்:** விரும்பிய பணி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு இரண்டுமே கிடைக்கும். மேலதிகாரிகள் உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உடல் சோர்வு, மனத்தெளிவின்மை அகலும். சக ஊழியர்கள் பகைமை மறந்து நட்புப் பாராட்டுவர். திறமையை வளர்த்துக்கொள்வர்.

**வியாபாரிகள்:** கொடுக்கல் வாங்கல்களில் நன்மைகளைக் காண்பர். போட்டிகளையும் சாதுர்யத்துடன் சமாளிப்பர். விற்பனை பிரதிநிதிகள் சிறப்பாக பணியாற்றுவர். அதிக இலாபம் தரும் பொருட்களை வாங்கி விற்பனை செய்வார்கள். வங்கிக் கடன்களும் கிடைக்கும். சிறிய அளவில் வியாபாரத்தை விரிவுபடுத்த முனைவர்.




**அரசியல்வாதிகள்:** எதிர்பாராத இடங்களிலிருந்து விரும்பிய உதவிகள் கிடைக்கும். மனஉற்சாகத்துடன் கட்சி பிரசாரங்களில் பங்கேற்பீர்கள். வழக்குகளும் முடிவுக்கு வரும். அதிகாரம் மிக்க பதவிகளும் உங்களைத் தேடி வரும். வெற்றி தரும்படியான பயணங்களை மேற்கொள்வர். தொண்டர்களும் உங்கள் மனமறிந்து நடந்து கொள்வர்.

**கலைத்துறையினர்:** புதிய அங்கீகாரங்களைப் பெறுவர். புதிய வாய்ப்புகளும் வரும். திறமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் சாதகமாக மாறும். பொருளாதார வசதிகள் மேம்படும். புதிய வண்டி வாகனங்களை வாங்குவீர்கள். புகழ் வளரும்.

**பெண்கள்:** அனைத்து காரியங்களும் சுமுகமாக முடிவடையும். குடும்பத்தாரின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவீர்கள்.

கணவரிடம் நல்ல உறவு அமையும். ஆன்மிகத்திலும் நாட்டம் அதிகரிக்கும். ஆலயங்களுக்கு சென்று வருவர். பொருளாதாரம் நன்றாக இருக்கும். கடன் தொல்லைகள் ஏற்படாது.

**மாணவர்கள்:** கடினமாக உழைத்துக் கணிசமான மதிப்பெண்கள் பெறுவர். உடன் பிறந்தோரின் உதவிகளால் கல்வியில் முன்னேறுவர். பயிற்சியும் முயற்சியும் உங்களை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்லும். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடம் நல்ல முறையில் பழகுவீர்கள்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த ஆண்டு தடைகளை முறியடித்து காரிய வெற்றி காணலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் பெருகும். ஏதேனும் ஒரு காரணத்தால் குடும்பத்தைவிட்டுப் பிரிந்து சென்றவர்கள் ஒன்று சேருவார்கள்.

**அனுஷம்:** இந்த ஆண்டு கணவன்-மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் இனிதே நடக்கும். நல்ல வரனாகவும் கிடைக்கும். குழந்தை பாக்கியம் கிட்டும்.

**கேட்டை:** இந்த ஆண்டு உறவினர்கள், நண்பர்கள் மூலம் அனுகூலம் கிடைக்கும். உடல்நலனைப் பொறுத்த வரை சிறப்பாக இருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். கோரிக்கைகள், ஒப்பந்தங்கள் நிறைவேறும்.

**பரிகாரம்:** செவ்வாய் தோறும் அருகிலிருக்கும் அம்மன் கோவிலுக்குச் சென்று வலம் வந்து வணங்கி வரவும். நல்லெண்ணெய் விளக்கு ஏற்றலாம். கோளறு பதிகம் பாராயணம் செய்யலாம். செவ்வாய்தோறும் எலுமிச்சை மாலையை அம்மனுக்கு அர்ப்பணித்து வலம் வந்து வணங்குங்கள்.

முன்னோர் வழிபாடு தினமும் செய்யவும். கிழக்கு, வடக்கு ஆகிய திசைகள் நன்மை தரும். செவ்வாய் - குரு - சுக்கிரன் அனுகூலமாக இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாப்பரசர்...

மதிக்கப்பட்டிருந்த பாப்பரசர் பிரான்சிஸ் குணமடைந்து வெளியேறிய நிலையில் ஓய்வில் இருந்தார்.

இந்தநிலையில் நேற்று அவர் காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த முதலாவது பாப்பரசரான அவர் 12 ஆண்டுகள் இறை சேவையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## விசாரணைக்கு..

தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக இந்த அழைப்பானை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அடுத்த மாதம் 05ஆம் திகதி வரை சாமர சம்பத் தசநாயக்கவை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## கம்பளையில்..

முடிவை விரைவுபடுத்தி அந்த முடிவை வெளியிடுவதற்காக, சந்தேகநபர் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து 2 இலட்சம் ரூபாய் இலஞ்சம் கோரியிருந்தார்.

இந்தநிலையில் குறித்த வர்த்தகர் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய குறித்த நீதவான் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவரை கண்டி மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## ஈஸ்டர்..

டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் குறிப்பிடப்பட்ட அட்டைகளை ஏந்தியிருந்தனர்.

இவர்கள் கடந்த பல மாதங்களாக ஒவ்வொரு 21ஆம் திகதியன்றும் இந்தச் சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை கட்டுவாபிட்டிய தேவாலயத்தில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை போராட்டம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்று, போராட்டக்காரர்களோடு கலந்துரையாடியிருந்தார். (ம-7)

## அரசியல்..

மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

சமூக ஊடகப் பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உள்ளூராட்சித் தேர்தலிற்கு முன்பாக அரசியல் இலாபமீட்டுவதற்காக அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப் பயன்படுத்துகின்றது.

அரசாங்கம் தேசிய துன்பியல் நிகழ்வை உணர்ச்சிபூர்வமான பதில்களைத் தூண்டவும், பொதுமக்களின் உணர்வுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தவும் கையாள்கின்றது.

நீதிபதி ஜனக் டி சில்வா தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை அப்போதைய ஜனாதிபதியின் உத்தரவிற்கு ஏற்ப 2021 பெப்ரவரி 23ஆம் திகதி பாராளுமன்றத்திடம் கையளிக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ஷ பாராளுமன்ற இணையத்தளத்தில் அதனை இப்போதும் பார்வையிடலாம் எனத் தெரிவித்துள்ளார்

இந்த அறிக்கையின் உள்ளடக்கங்கள் ஏற்கெனவே சட்டமா அதிபரிடம் உள்ளன எனத் தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ஷ அதில் இடம்பெற்றுள்ள விடயங்கள் குறித்து சட்டமா அதிபருக்கு முழுமையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

துரதிர்ஷ்டவசமாக தற்போதைய அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்ற தேசிய துயரத்தை ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்துகின்றதுஎனஅவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வடக்கின்..

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அவர் உக்கிளாங்குளம் பகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், நாட்டின் பொருளாதரத்தை கிராம மட்டத்தில் இருந்து அபிவிருத்தி செய்யவேண்டும். நாட்டையும் அபிவிருத்தி செய்யவேண்டும்.

எங்களுக்கு செய்வதற்கு பல வேலைத்திட்டங்கள் இருக்கின்றன. இந்த வன்னிப் பிரதேசத்திற்கு கல்வி எவ்வளவு முக்கியத்துவமானது என்பதை நான் புரிந்து கொண்டுள்ளேன்.

அரசு என்ற வகையில் நாம் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்றோம். வட பகுதி மக்கள் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குபவர்கள் என்பதை நான் அறிவேன்.

ஆனால் வடமாகாணத்தின் கல்வி இன்று பாதிப்படைந்து கீழ் நிலையில் உள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை வளப்பற்றாக்குறை என்பன நாடுமுழுவதும் இருந்தாலும் வடக்கில் கூடுதலாக உள்ளது.

சிறுவர்கள் பாடசாலை கல்வியில் அலட்சியமான போக்கைக் கடைப் பிடிக்கின்றமை வேதனையான விடயமாக உள்ளது. போதைப்பொருள் பாவனை வியாபித்துள்ளது. இதில் மிகுந்த கவனத்தை நாம் செலுத்த வேண்டும்.

எதிர் வரும் 2026ஆம் ஆண்டில் நாம் புதிய கல்விச்சீர்சிருத்தம் ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறோம். ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

கல்வியியல் கல்லூரிகளை விருத்தி செய்து அதில் உள்ள குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நிதி ஒதுக்கியுள்ளோம்.

ஆசிரியர் பற்றாக்குறையை தற்காலிகமாக நிவர்த்தி செய்வதற்கு தொழில்நுட்ப ரீதியான விடயங்களை உள்ளடக்க எதிர்பார்த்துள்ளோம். இதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் கேட்டு நிற்கின்றோம்.

மக்கள் எதிர்பார்க்கின்ற சமாதானத்தையும் ஒற்றுமையுடனும் அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அபிவிருத்தி அடைந்த ஒரு நாட்டை கையளிப்பதற்கு நாங்கள் அனைவரும் தயாராக வேண்டும் என்றார். (ம-7)

## விபரீத..

உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் மாந்தை மேற்கு இலுப்பைக் கட்வையைச் சேர்ந்த மாணவியே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் முருங்கன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.04.21
சீட்டிழுப்பு இலக்கம் 5808
J 7 6 5 6 9 3
அத சம்பத J 5 6 9 3
சீட்டிழுப்பு இலக்கம் 383
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.04.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1838
E 37 54 66 71 E
Double Chance 39091

மெகா பவர்
திகதி 21/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2156
V 13 07 16 22 70

ජය ஜய JAYA
திகதி 2025.04.21
சீட்டிழுப்பு இலக்கம் 76
B 1 2 2 0

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4050
சீட்டிழுப்பு திகதி 21.04.2025
N 03 32 56 71
N

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.21
சீட்டிழுப்பு இலக்கம் 1117
தனுசு 03 12 21 25 தனுசு
06134 31

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.04.2025 வெற்றி வாரம் 516
X 2 4 6 0 0 4
96587
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35,779,985.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2782
சீட்டிழுப்பு திகதி 2025.04.21 தினம் திங்கட்கிழமை
37 50 65 80 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,242,147.20

சனிதா
திகதி 21.04.2025 வெற்றி வாரம் 4943
10 13 61 79 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,011,350.40
92914

ජයෝදා ஜயோதா Jayoda
திகதி 2025.04.21 வெற்றி வாரம் 2120
30 52 53 60 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,946,648.80

சீட்டிழுப்பு வாரம் 4494
சீட்டிழுப்பு திகதி 21.04.2025 தினம் திங்கட்கிழமை
13 20 24 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,632,905.20
175668

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 10 08 21 36 65
1958
21.04.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.572,530,516.00

திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2608
சீட்டிழுப்பு திகதி : 2025.04.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,027,784.80
ADA KOTIPATHI
33 42 55 61 Y
415270


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

யமை தொடர்பான விசாரணைகளுக்காக மைத்திரிபால சிறிசேன வாக்குமூலம் வழங்குவதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று திங்கட்கிழமை (21) காலை முன்னிலையானார்.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து வெளியேறியிருந்தார். (ம-7)

## உயிர்த்த ஞாயிறு...

கொணர்வதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்புடைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை மாத்திரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசனம் வெளியிட்டார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை (21) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியார் என்பது தொடர்பிலான தகவல்களை நேற்றைய தினம் (நேற்று முன் தினம்) விசேட அறிவிப்பின் மூலம் வெளிக்கொணர்வதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்புடைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை மாத்திரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சாக்குப்போக்குகளை கூறிய இந்த அரசாங்கம், இன்றும் அதனையே செய்து மக்களை ஏமாற்றி வருகிறது. அரசியல் களத்தில் முதலாளித்துவம், சோசலிசம், கம்யூனிசம், சமூக ஜனநாயகம் என பல்வேறு கோட்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றில் சமீபத்தில் இணைந்ததோர் கோட்பாடு தான் பொய்யும் பாசாங்குத்தனமுமாகும்.

ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பொய்யான கோரிக்கைகளை முன்வைத்த மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான திசைகாட்டி அரசாங்கம், தற்போது புதிய கூற்றுக்களை முன்வைத்து, முட்டாள்தனமாக பிரஸ்தாபிக்கும் அரசாங்கமாக மாறியுள்ளது. நாட்டு மக்களை ஏமாற்றும் அரசாங்கம் இன்று செய்வதறியா அரசியலை முன்னெடுத்து வருகிறது.

33 சதவீதத்தால் மின் கட்டணத்தை குறைப்போம் என வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் இன்னும் 6 மாதங்களுக்கு மின்கட்டணத்தைக் குறைக்க முடியாது என்றனர்.

இதனால் பொதுமக்கள் கொந்தளித்து பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை நாடிய போது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு 20 சதவீதத்தால் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது. இந்த மின்சாரக் கட்டண குறைப்பை அரசாங்கமோ ஜனாதிபதியோ எடுக்கவில்லை. எஞ்சியுள்ள 13 சதவீத குறைப்பை இந்த அரசாங்கம் விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார். (ம-7)

## இளம் குடும்ப...

புதுவருடத்தன்று காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து தெல்லிப்பழை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சனிக்கிழமை (19) மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை (21) காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார் உடற்கூற்றுப் பரிசோதனையில் மூளைக் காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
CERTIFICATE IN BUSINESS ENGLISH
MAY INTAKE 2025 | DURATION 40 HOURS
INVESTMENT LKR 10,000
AFTER O/L's & A/L's
COMMENCE ON 9TH OF MAY 2025
021 7534 807
(C-2768)

பாராட்டி வாழ்த்துகின்றோம்


திருமதி ராஜினி
விக்கினேஸ்வரமூர்த்தி (BA)
22.03.2025 யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 39 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டமையைப் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
கிளி/ புளியம்பொக்கணை நாகேந்திரா வித்தியாலயம்.
(C-2762)

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
Lanka Cargo Worldwide Express
பணியாளர் தேவை
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 038 5584
(1056)

பணியாளர் தேவை
யாழ். கச்சேரிக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றிற்கு பெண் பணியாளர் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். யாழ். நகரப் பகுதிக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு :
077 1629 385, 077 187 7380
(3991)

ஆசிரியர் வெற்றிடம்
வடமராட்சியில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு புவியியல், ICT, தமிழ், வரலாறு, குடியுரிமை, கணிதம் ஆகிய பாடங்களை தரம் : 6 - 11 க்கு கற்பிக்கக் கூடியவர்கள் தேவை.
077 087 2903
(C-2769)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1052)
076 825 7716 (ஆகாஸ்)

## மரண அறிவித்தல்

### தம்பிராசா பரமேஸ்வரி (பவுண்)



பிறப்பு 04.01.1946
இறப்பு 21.04.2025

செங்குந்தா வீதி, கல்வியங்காட்டினைப் பிறப்பிடமாகவும் ராணி வீதி, கல்வியங்காட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா பரமேஸ்வரி அவர்கள் நேற்று (21.04.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் இரத்தினசபாபதி, குமாரசாமி, கமலாம்பிகை, சண்முகநாதன், தனேஸ்வரி, தர்மலிங்கம், லோகநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நித்தியபவான், நித்தியலோஜினி, யோகேஸ்வரன், பாலச்சந்திரன், சசிகரன், சத்தியபவானி, கஜீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2025) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராணி வீதி,
கல்வியங்காடு.

தகவல் : நித்தியலோஜினி
(மகள் - மகன்)

(3990)

வாழைக் குட்டிகள் விற்பனைக்குண்டு
நல்ல இன கதலி, இதரை, கப்பல் வாழைக் குட்டிகள் புன்னாலைக்கட்டுவனில் விற்பனைக்குண்டு.
076 419 6358
(3988)

வேலையாட்கள் தேவை
வெதுப்பகம் ஒன்றிற்கு
♦விற்பனைப் பிரதிநிதிகள் (இருபாலாரும்)
♦உற்பத்திப் பொருட்கள் செய்யத் தெரிந்தவர்கள் (ஆண்கள்) தேவை.
077 548 8044
(3989)

மணமகன் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம் மேஷ ராசியில் பிறந்த மணமகளுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
077 413 4528
(1056)

மணமகன் தேவை
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த1993, கேட்டை, Engineer, UK citizen செவ்வாய் குற்றமுள்ள விவாகரத்தான பெண்ணுக்கு மணமகன் தேவை. (பதிவிலக்கம் 18823)
077 335 3461
(1055)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2766)

மலர் வளையம்
புத்தம் புதியவை
Small 2500/=
Large 3500/=
ஈ - சன்ஸ்
(C-2765)
No.148, Main Street, Jaffna.
021 222 2695 077 429 0613

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org